நாள் - 16.03.2026

**C.C. No.** 106/2019

**PW1**- சீனிவாசனன் , **த/பெ.** ஜயாசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 16th **day of March** 2026.

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இன்று குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் அரசூர் கே பி ஆர் மில் உள்ளே கேண்டீன் வைத்து உள்ளேன். மேலும் பூக்கடையும் வைத்துள்ளேன் நான் சுமார் 18 வருடங்களாக கேண்டீன் மற்றும் பூக்கடை வைத்துள்ளேன். 2017 முன்பாக எனக்கு எதிரியை ஒன்னரை வருடங்களாக தெரியும். எதிரி எவ்வகையில் எனக்கு அறிமுகம் ஆனார் என்றால் ஷேர் மார்க்கெட் மற்றும் ரியல் எஸ்டேட் செய்து வந்தார். அதன் அடிப்படையில் எனக்கு அறிமுகம் ஆனார்.நான் எதிரியிடம் ஷேர் மார்க்கெட்டில் ஏதேனும் முதலீடு செய்து உள்ளேனா என்றால் நான் எந்த முதலீடும் செய்ததில்லை. எதிரி செய்து வருவதில் ஏதேனும் இடம் நான் வாங்கினேன் என்றால் அவ்வாறு எதுவும் ஆகவில்லை. எதிரி வழக்கு காசோலையை எங்கு எப்பொழுது எனக்கு கொடுத்தார் என்றால் எனது வீட்டில் வைத்துகொடுத்தார் தேதி ஞாபகம் இல்லை. அது எதிரிக்கு வழக்கு காசோலை இந்நீதிமன்றத்தில் இருந்து வரும் வரை எதிரிக்கு என்னை யார் என்றே தெரியாது என்றால் சரியல்ல .

2. எதிரி எனது வீட்டில் வைத்து காசோலை கொடுத்ததாக சொல்வது பொய் என்றும் எதற்கு என்னுடைய வீடு எங்கு அமைந்துள்ளது என்ற விவரம் தெரியாது என்றால் சரியல்ல. என்னுடைய வீட்டிற்கும் எதிரி வீட்டிற்கும் சுமார் 60 கிலோ மீட்டருக்குள் இருக்கும். எதிரி அவருடைய ஊரிலிருந்து என்னிடம் வந்து கடன் வாங்க வேண்டிய எந்த அவசியமும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு ஒரே ஒரு செல்போன் எண் மட்டும் உள்ளது. செல்போன் எண் 9788338939 ஆகும். என்னுடைய செல்போன் அழைப்புகளை 2017 ஆம் ஆண்டுக்கு உட்பட்டதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் அது சம்பந்தமாக பதிவு எடுக்க இயலுமா என எனக்கு தெரியாது. இவ்வழக்கில் எனக்கு ஆதரவாக சாட்சி சொல்லி உள்ளவர்கள் என்னுடைய பங்குதாரர்கள் என்றால் சரியல்ல. நானும் இவ்வழத்கின் இதர சாட்சிகளும் சேர்ந்து ஊரில் பணம் கொடுப்பது நடவடிக்கை சொத்தை பறிப்பது மேலும் ஆவணங்களை எடுத்து வழக்கு தாக்கல் செய்து வருகிறோம் என்றால் சரி அல்ல. நான் தான் சுதா k.சின்னசாமி ஆகியவர்கள் நீதிமன்றத்திற்கு வந்த பொழுது சாட்சியமளித்து மீண்டும் நான் தான் அவர்களை பேருந்து நிறுத்தத்தில் இறக்கி விட்டேன் என்றால் சரியல்ல.

3.நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தொகை என்ன டினாமினேஷனாக கொடுத்தேன் என்றால் 100 ரூபாய் மற்றும் 500 ரூபாய் டினாமினேஷனாக கொடுத்தேன். எதிரி எனக்கு எந்த தொகையும் தர வேண்டியது இல்லை என்றும் எதிரி சுதா அவர்களிடம் கொடுத்து வைத்த காசோலையை நான் தவறாக பயன்படுத்தி இவ்வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. பொதுவாக எதிரியின் முகவரிக்கு செல்ல வேண்டும் என்றால் சுமார் 2 மணி நேரம் ஆகும். நாம் எதிரி வீட்டிற்கு சென்றதில்லை என்றும் எதிரியின் வீடு எங்கு அமைந்துள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் சுதாவிடமிருந்து வாங்கி வைத்திருந்த ஆவணத்தை ரூ.1.5 லட்சம் பெற்றுக் கொண்டு திரும்ப அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் எந்த தொகையும் பெறவில்லை என்றும் எனக்கு கொடுக்கப்பட்டுள்ள காசோலை இல்லை என்றால் சரி அல்ல. எதிரியை யார் என்று எனக்குத் தெரியாது என்றும் எதிரி சுதா அவர்களிடம் கொடுத்த காசோலையை நான் பயன்படுத்தி வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. நான் கே.சின்னசாமி, சுதா மற்றும் காங்கேயன் ஆகிய மூன்று பேரும் சேர்ந்து எதிரியிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற காரணத்திற்காக நான் வழக்கு தாக்கல் செய்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**Signature of Witness**

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.03.16 19:51:10 +0530